# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
www.supeedsam.com

புதன்கிழமை 18.09.2024 supeedsam.com supeedsam@gmail.com


# தடுமாறுகின்றதா தமிழரசு கட்சி?

## தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவாக மேடையேறிய மாவை



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கவுள்ளதாக அறிவித்தார்.

எனினும், இந்த அறிவிப்பு வெளியான சில மணி நேரங்களிலேயே, மாவை சேனாதிராஜா கிளிநொச்சியில் தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு ஆதரவை தெரிவிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

தேர்தல் விஞ்ஞாபனங்களை மதிப்பிடும் பணியில் ஈடுபட்டுள்ள தமிழரசு கட்சியின் ஆறு பேர் கொண்ட குழு

02 ஆம் பக்கத்தில்...

## தமிழர்கள் திரட்சியாக பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும்

### சிறீதரன் பகிரங்கக் கோரிக்கை

தமிழர்கள் திரட்சியாகத் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் விசேட குழு கூட்டத்தின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விசேட குழுக் கூட்டத்திலும் மத்திய குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவை நடைமுறைப்படுத்தப் பாவேதாக தெரிவித்தார்கள். அதில் எனக்கு

02 ஆம் பக்கத்தில்...



## ரணிலை ஆதரிக்க போட்டியிலிருந்து விலகும் நாமல்

### மகிந்த கூறினாரா?

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவுசெய்யும் தேர்தல் எதிர்வரும் சனிக்கிழமை (செப்டம்பர் 21ஆம் திகதி) நடைபெற உள்ளது.

கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் பிரச்சாரங்களும் இறுதி கட்டத்தை நெருங்கியுள்ளன. நாளை புதன்கிழமை நள்ளிரவுடன் பிரச்சாரக் கூட்டங்கள் நிறைவடைய உள்ளதுடன், மௌனக்காலமும் ஆரம்பமாக உள்ளது.

19 மற்றும் 20ஆம் திகதிகள் மௌனக்காலமாக அறிவிக்கப்



பட்டுள்ளது. இந்த நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச, தேர்தல் போட்டியிலிருந்து விலகி ஜனாதிபதியும் சுயேட்சை

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதும் சிங்கள வேட்பாளருக்கு வாக்களிப்பதும் சமம்



'ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள், தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதும், ஒற்றையாட்சியை வலியுறுத்தும் சிங்கள வேட்பாளருக்கு வாக்களிப்பதும் ஒன்றுதான். தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிக்கும் பட்சத்தில், தேர்தலுக்குப் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கான சகல சதித்திட்டங்களும் முன்னெடுக்கப்படும்.' இவ்வாறு எச்சரிக்கை

02 ஆம் பக்கத்தில்...

## நாடாளுமன்றம் கலைக்கப்படுமா?


### இறுதிகட்ட பரப்புரையில் ஜனாதிபதி வேட்பாளர்கள்

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவுசெய்யும் தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெற உள்ள நிலையில், இன்று புதன்கிழமை நள்ளிரவுடன் பிரச்சார நடவடிக்கைகள் நிறைவடைவதால் பிரதான வேட்பாளர்கள் சூறாவளி பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிரதான வேட்பாளர்கள் தமது இறுதி பிரச்சாரக்

02 ஆம் பக்கத்தில்...

## பொது வேட்பாளர் விடயத்தில் புலம்பெயர் மக்கள் ஒருமித்த நிலைப்பாடு



தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் ஜனாதிபதி தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரிக்கும் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டிருந்ததுடன் தமிழ் பொது வேட்பாளரை களமிறக்கியதற்காக முக்கிய நோக்கங்கள் தொடர்பாக கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தது.

கூட்டத்தில் தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன்,

02 ஆம் பக்கத்தில்...

# ரணிலுக்கு அதிகளவான வாக்குகளைப் பெற்றுக்கொடுப்பதே சுமந்திரனின் நோக்கம்

இலங்கை தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாசாவிற்கு ஆதரவு வழங்குவதாக தெரிவிக்கும் விடயம் ரணில் விக்ரமசிங்கவிற்கு அதிகளவான வாக்குகளை சேர்ப்பதற்கான சதி நடவடிக்கை என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தரிவிக்கையில், தமிழ்த் தேசியக் கட்சிகள் சஜித் பிரேமதாசவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள நிலை சிங்கள மக்கள் மத்தியில் சஜித்திற்கான ஆதரவினை குறைக்கும் நடவடிக்கையாகும்.

சஜித் பிரேமதாசசிங்கள தேசிய வாதத்திற்கு நேர்மையாக நடந்து கொள்வார் என்னும் நிலைப்பாட்டில் குழப்பத்தினை ஏற்படுத்தி அவரது தென்னிலங்கை வாக்குகளை ரணிலின் பக்கம் திரும்பும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சஜித் பிரேமதாசவினை ஆதரிக்கும் வடக்கு கிழக்கினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஆதரவு கிடையாது. எனினும் இந்த நிலைப்பாட்டில் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தினையும் ஏற்படுத்தப் போவதில்லை.

ஆனால் தென்னிலங்கையில் குறிப்பாக சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் அரசியல்வாதிகளின் நிலைப்பாடு குழப்பத்தினை ஏற்படுத்தும். ஆகவே நாம் இவை அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் இன்று தமிழ்த் தேசியத்திற்கு நேர்மையாக கொடுக்கக்கூடிய ஒரு நேர்மையான வழி தேர்தலைப் பகிஸ்கரிப்பது மட்டுமே.

எனவே 2024 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி தேர்தலை புறக்கணிப்பதே எமது கட்சியின் நிலைப்பாடு என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

# கல்விக்கான உதவி தொகை வழங்கி வைப்பு!






(அ . அச்சுதன்)

திருகோணமலையில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கல்விக்கான உதவிதொகை பெரண்டினா நிறுவனம் ஊடாக வழங்கி வைக்கப்பட்டன. குறித்த நிகழ்வு திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி மண்டபத்தில் வெள்ளிக்கிழமை மாலை (13) இடம் பெற்றது.

பெரெண்டினாவின் கல்வி ஆதரவு திட்டங்களில் ஒன்றாக, ஆண்டுதோறும் குறைந்த வருமானம் கொண்ட பெரெண்டினா பயனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த திறமையான மாணவர்களுக்கு Bright Students Scholarship திட்டத்தின் மூலம் உதவி வழங்கி வருகின்றது.

இந்த உதவித்தொகை கல்வித் தராதர உயர்தர பிரிவு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அத்தியாவசியமான மாதாந்த செலவுகளை ஈடு செய்ய பெரிதும் பங்களிக்கிறது. தற்போது, இந்தத் திட்டத்தின் மூலம் வருடந்தோறும் 550க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு 7 மில்லியனுக்கு மேலான தொகையை வழங்கி ஆதரவளிப்பதில் பெரெண்டினா நிறுவனம் பெருமிதம் கொள்கின்றது.

இந்த நிகழ்வானது திருகோணமலை பிரதேச வலய முகாமையாளர் இ.திருச்செல்வம் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக திருகோணமலை கோட்டக் கல்வி பணிப்பாளர் சண்முகநாயகம் . சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிபர் கணேசலிங்கம் ,உவர்மலை விவேகானந்தா கல்லூரி அதிபர் புவனேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மற்றும் திருகோணமலை கிளை முகாமையாளர்கள் கலந்து கொண்டனர். மற்றும் கணக்காய்வாளர் பெரெண்டினா ஊழியர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் 2024 கல்வி ஆண்டுக்குரிய உயர்தர மாணவர்களுக்கு காசோலைகளும் அப்பியாச புத்தகங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொது வேட்பாளர் விடயத்தில் புலம்பெயர்

க.அருந்துவபாலன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், காக்கா என்று அழைக்கப்படும் மனோகரன் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அரிய நேத்திரன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில், இலங்கையில் இருக்கக்கூடிய ஈழ தமிழர்கள் எதிர்நோக்கும் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எட்டப்படவில்லை. எந்த ஜனாதிபதியும் எங்களுக்கான ஒரு தீர்வை தரவில்லை .

என்னை பொது வேட்பாளராக ஆதரித்ததன் பின்னராக புலம்பெயர்ந்து இருக்கின்ற தமிழ் மக்களை ஒருமித்த நிலைமை காணக் கூடியதாக இருக்கிறது .

அவர்கள் எல்லோரும் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்று கூறி இருக்கிறார்கள். உலகத்திலே எந்த ஒரு நாடும் இல்லாதவாறு ஒரு வேட்பாளருக்கு ஆதரவழங்கி வருகின்றனர்.

நான் வெற்றி அடைய வேண்டும் என்றால் நாங்கள் நாங்களாக இருக்க வேண்டும் பொது மக்கள் பொதுமக்களாக இருக்க வேண்டும் இவ்வாறு பொது வேட்பாளர் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்றம் கலைக்கப்படுமா?

கூட்டங்களை கொழும்பை மையப்படுத்தி நடத்த உள்ளனர். இதற்காக கொழும்பில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட கூடுமொன சில கருத்துகள் சமூகத்தில் பகிரப்பட்டு வருகின்றன.

ஆனால், அத்தகைய முயற்சிகள் எதனையும் அரசாங்கம் செய்யாதென அரசதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெற்றிபெற்றால் 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னரே நாடாளுமன்றம் கலைக்கப்படும் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்திருந்தார்.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமாச மற்றும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் தாம் வெற்றிபெற்ற பின்னர் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்த உள்ளதாக கூறியுள்ளனர்.

இந்த நிலையில் அண்மையில் இடம் பெற்ற தொலைக்காட்சி நிகழ்சியொன்றில் கருத்து வெளியிட்ட அனுரகுமார திஸாநாயக்க, ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்றதும் நாடாளுமன்றம் கலைக்கப்படுவது உறுதியாகும். அதேபோன்று ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் அதனை எதிர்கொள்வதற்கான வழிமுறைகளும் தேசிய மக்கள் சக்தியிடம் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

## ரணிலை ஆதரிக்க போட்டியிலிருந்து

ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்க உள்ளதாக தொடம்பஹல ராகுல தேரர் பரபரப்பான கருத்தொன்றை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, நாமல் ராஜபக்சவிடம் கோரியுள்ளதாகவும் தொடம்பஹல ராகுல தேரர் கூறியுள்ளார்.

நாரஹென்பிட்டி அபயராம விகாரையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இவரது கருத்துக்கான பதில்கள் எதனையும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன இதுவரை வழங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தமிழர்கள் திரட்சியாக

உடன்பாடு இல்லை என்று தெரிவித்துள்ளேன். சிங்கள தேசிய வேட்பாளர்கள் எவரினதும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர்களின் அரசியல் உரிமை, தன்னாட்சி தொடர்பில் எதுவும் இல்லை. இதனால் நான் அதனை ஏற்றுக்காளெ்ளவில்லை.

தமிழர்கள் திரட்சியாக தங்களின் தேசத்தின் இருப்பையும், தங்களின் அடிப்படை அரசியல் உரிமைகளையும் நிலைநிறுத்துவதற்குத் தமிழ்ப் பொது வேட்பாளருக்கே வாக்களிக்க வேண்டும் என்பதை வெளிப்படையாகத் தெரிவித்துவிட்டு வந்துள்ளேன்.' - என்றார்.

# தமிழ் தேசிய கட்சிகள் தேர்தல் விடயத்தில் தாங்களும் குழம்பி மக்களையும் குழப்புகின்றது

(பாறுக் ஷிஹான்)

தமிழ் தேசியம் பேசுகின்ற கட்சிகள் தேர்தல் விடயத்தில் தாங்களும் குழம்பி மக்களையும் குழப்புவது தான் அவர்களின் பொதுவான இயல்பு என கடற்றொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பகுதியில்(17) நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின் ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது வடக்கு கிழக்கு மக்கள் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தெளிவாக இருக்கின்றார்கள் .தேர்தல் தொடர்பில் நீண்ட கால அனுபவங்கள் அம்மக்களுக்கு இருக்கின்றது.சரியான திசை வழி நோக்கி அம்மக்கள் அணி திரள்வார்கள் என நான் நினைக்கின்றேன். ஏனெனில் வடகிழக்கில் உள்ள ஒவ்வொரு கட்சிகளுக்கும் கொள்கைகள் வேலைத்திட்டங்கள் இருக்கலாம்.அந்த கொள்கைகள் வேலைத்திட்டங்களில் சுயலாபங்கள் தான் கலந்து இருக்கின்றது.

இது தவிர தேர்தல் புறக்கணிப்பு பொது வேட்பாளர்கள் விடயத்திலும் எம்மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள்.அதனை எதிர்வரும் 22 ஆந் திகதி அறிந்து கொள்வோம். இருந்தாலும் எனது ஜனாதிபதி வேட்பாளர் அம்மான் ரணில் விக்ரமசிங்க தான் எனது தெரிவும் விருப்பமும் கூட.

அத்துடன் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் தேசியம் பேசுகின்ற கட்சிகள் தேர்தல் விடயத்தில் தாங்களும் குழம்பி மக்களையும் குழப்புவது தான் அவர்களின் பொதுவான இயல்பு. எனவே அதனால் தான் மக்கள் தற்போது நிதானமாக செயற்பட்டு வருகின்றார்கள் என குறிப்பிட்டார்.

## தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதும்

விடுத்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

எனவே, தமிழ்த் தேசியக் கொள்கைக்கு உண்மையாக இருப்பதற்கான வாய்ப்பு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலமாக மாத்திரமே சாத்தியமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், இம்முறை ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என வலியுறுத்தி வரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு குறித்து தெளிவுபடுத்தும் வகையில் நேற்று திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே கஜேந்திரகுமார் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இம்முறை ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு பற்றி நாம் ஏற்கனவே அறிவித்திருந்தோம். இருப்பினும் இந்த விடயத்தைப் பொறுத்தமட்டில் நான் இங்கு இருந்திருந்தால் எனது நிலைப்பாடு வேறானதாக இருந்திருக்கும் என்று சர்ச்சைகளை ஏற்படுத்தும் வகையில் திட்டமிட்டு சில கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றன.

இருப்பினும் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் கொள்கை ரீதியில் சில விடயங்களை நாம் தெளிவுபடுத்தியிருந்தோம். குறிப்பாக 2009 உடன் தமிழ்த் தேசிய அரசியலுக்கு முற்றுப் புள்ளி வைத்தவிட்டதாகவே சிங்கள தேசம் நம்பியது. சிங்கள தேசியவாதத்தின் ஊடாக தமிழ்த் தேசியவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிடலாம் என நம்பப்பட்ட சூழலில், நாம் அதனை நிராகரித்து தமிழ்த் தேசியம் தொடர்பான நிலைப்பாட்டை உறுதியாகக் கடைப்பிடித்து வந்திருக்கின்றோம்.

அந்தவகையில் தமிழ் பிரதிநிதித்துவத்தை இழக்காமல், அதேநேரம் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி, சிங்கள பௌத்த தேசியவாதத்துக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிக்காட்டக்கூடிய ஒரேயொரு தேர்தல் ஜனாதிபதித் தேர்தல் மாத்திரமேயாகும். ஏனெனில் இந்தத் தேர்தலின் ஊடாக நாம் அடைந்துகொள்ளப் போவது எதுவுமில்லை. எனவே, இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் ஊடாக சிங்கள தேசியவாதம் உச்சத்தில் இருக்கையில் தமிழ்த் தேசியவாதம் மூலம் வலுவான அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும்.

அடுத்ததாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினரால் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டிருக்கின்றார். இருப்பினும் தமிழர்களுக்கு சாபக்கேடாக இருக்கின்ற 13 ஆவது திருத்தத்தை ஆதரித்தவர்களும், ரணில் விக்கிரமசிங்கவே சிறந்த ஆட்சியாளர் எனக் கூறியவர்களுமே தற்போது அந்தப் பொதுக் கட்டமைப்பில் இருக்கின்றார்கள்.

எனவே, அவர்கள் பொது வேட்பாளரைக் களமிறக்குவதன் ஊடாக தமிழ்த் தேசியத்தைக் கைவிட்டு, ஒற்றையாட்சிக்குள் 13 ஆவது திருத்தத்தை முன்னிலைப் படுத்தக்கூடிய சூழலை உருவாக்க முயற்சிக்கின்றார்கள். எனவே, தமிழ் மக்கள் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதும், ஒற்றையாட்சியை வலியுறுத்தும் சிங்கள வேட்பாளருக்கு வாக்களிப்பதும் ஒன்று தான். பொதுவேட்பாளருக்கு வாக்களிக்கும் பட்சத்தில், தேர்தலுக்குப் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதற்கான சகல சதித்திட்டங்களும் முன்னெடுக்கப்படும் என்பதை இப்போதே கூறிவைக்கின்றோம்.

அதேபோன்று இங்கு நாம் பூகோள அரசியல் சூழலையும் கருத்தில்கொள்ள வேண்டும். மேற்குலக நாடுகளும், இந்தியாவும் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றியீட்டுவதையே விரும்புகின்றன. ஆனால், ரணில் விக்கிரமசிங்கவைத் தமிழ் மக்களுக்கு சாதகமானவராகக் காண்பித்து வந்த நிலை மாறியிருக்கும் தற்போதைய சூழ்நிலையில், அவருக்குத் தமிழர்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்பதை இந்தியாவும், மேற்குலகமும் புரிந்துகொண்டிருக்கின்றது.

ஆகவே, ஏனைய வேட்பாளர்களுக்கு அளிக்கப்படக்கூடிய வாக்குகளை ரணில் விக்கிரமசிங்கவுக்கு அளிக்கச் செய்வதிலும் அல்லது ரணிலுக்குக் கிடைக்காத வாக்குகள் ஏனைய வேட்பாளர்களுக்கும் கிடைக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதையும் இலக்காகக்கொண்டு சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே இதுவரையில் சமஷ்டி என்ற வார்த்தையை உச்சரிக்காமல் இருந்த தமிழரசுக் கட்சி, இம்முறை தேர்தலில் சமஷ்டியை வலியுறுத்தி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்திருக்கின்றது. எனவே, இன்றளவிலே தமிழ்த் தேசியக் கொள்கைக்கு உண்மையாக இருப்பதற்கான வாய்ப்பு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலமாக மாத்திரமே சாத்தியமாகும். ஆகவே, இனிவருங்காலங்களில் தமிழர்களை எவ்வகையிலும் ஏமாற்ற முடியாது என்பதை இந்தத் தேர்தலில் காண்பிக்க வேண்டும்." - என்றார்.

## தடுமாறுகின்றதா

வவுனியாவில் கூடியது.

மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், கட்சியின் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம், சிரேஷ்ட பிரதித் தலைவர் சி.வி.கே.சிவஞானம், மட்டக்களப்பு முன்னாள் மேயர் தியாகராஜா சரவணபவன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது, மாவை சேனாதிராஜா பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கும் கட்சியின் மத்திய குழு தீர்மானத்தை வலியுறுத்தி, 21ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் அவருக்கு ஆதரவளிக்குமாறு வாக்காளர்களை வலியுறுத்தினார்.

சமூகம் எதிர்நோக்கும் அழுத்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வாக்காளர்களிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். இருந்த போதிலும், மாவை சேனாதிராஜா கிளிநொச்சி கூட்டத்தில் கலந்து கொண்டார். இதன்போது தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் எனவும் கோரியிருந்தார். நாங்கள் இலங்கையில் பல ஆண்டுகளாக இந்த விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள். எங்களது எண்ணங்களும் தீர்மானங்களும் அர்ப்பணிப்புகளும் விடுதலைக்காகவே அமைந்திருக்கின்றன.

அரசியல் சூழலில் இவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டாலும் எமது இனத்தின் விடுதலையை நாங்கள் மறந்து விட மாட்டோம். எங்களது உயிரை அர்ப்பணிப்பதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கின்றோம். என்றார்.

எவ்வாறாயினும் தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடும் பா.அரியநேத்திரனுக்கு எதிராக நாங்கள் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்கின்றோம் என தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார்.

மேலும், அவரிடத்தில் விளக்கம் கோரி கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது. எங்கள் கூட்டங்களுக்கு அவர் வருவதற்கு நாங்கள் தடை விதித்திருக்கின்றோம்.

அவருடன் இணைந்து பிரசாரத்தில் ஈடுபடும் எங்கள் உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை விடுத்து தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றோம். எனவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

# சிங்கள ஜனாதிபதிகள் மீதான நம்பிக்கையின்மையே தமிழ் பொது வேட்பாளர் வரவு!

## இது வெல்வதற்கான வாக்கு அல்ல; ஒற்றுமையை பறைசாற்றும் வாக்கு!; செய்தியாளர் மாநாட்டில் ஜெயசிறில்

( வி.ரி. சகாதேவராஜா)

தொடர்ச்சியாக இலங்கையை ஆண்ட சிங்களஜனாதிபதிகள் மீதான நம்பிக்கையின்மையே இன்றைய தமிழ் பொது வேட்பாளரின் வரவு. அவருக்கு அளிக்கும் வாக்கு வெல்வதற்கல்ல; ஒற்றுமையை பறைசாற்றும் வாக்கு இவ்வாறு தாயக செயலணியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் முன்னாள் தவிசாளருமான கலாநிதி கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் விசேட செய்தியாளர் சந்திப்பு காரைதீவு பகுதியில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாநாட்டில் கட்சி பிரமுகர்களான முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் திருமதி சின்னையா ஜெயராணி சமூக செயற்பாட்டாளர் வினாயகம் விமலநாதன் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். தமிழ் ஜனாதிபதி பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதன் ஊடாக தமிழ் மக்களின் எதிர்கால திட்டங்கள் சிறப்பாக செயற்படும் என்றார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது ..

கடந்த எட்டு ஜனாதிபதிகளுக்கு வாக்கு போட்டு தமிழர்கள் கண்ட பலன் என்ன?எட்டு ஜனாதிபதிகளும் தமிழ் மக்களை ஏமாற்றினார்கள்.

பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திக்கப்பட்டன. பல உறுதிமொழிகள் அளிக்கப்பட்டன. ஆனால் அத்தனையும் கிழித்தெறியப்பட்டு ஏமாற்றப்பட்டதே வரலாறு . தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளில் புத்தர் சிலைகளை அமைத்து நில ஆக்கிரமிப்பு செய்கிறார்கள்.அந்த வகையில் சி




ங்களஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வாக்கு போடத்தான் வேண்டுமா? சற்று சிந்தியுங்கள். இம்முறையாவது சர்வதேசத்திற்கு எமது ஒற்றுமையை வெளிக்காட்டுமுகமாக சங்குக்கு வாக்களிக்க வேண்டும் என்று வேண்டுகின்றேன் .

86 அமைப்புகள் ஏழு அரசியல் கட்சிகள் இணைந்து பொதுக் கட்டமைப்பு ஊடாக நிறுத்தப்பட்ட பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு அந்த வாக்கை அளித்து எமது ஒற்றுமையை காட்டுவோம் .

இது வெல்வதற்கான வாக்கு அல்ல என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் எமது ஒற்றுமைக்கான சின்னம் தான் இது. இன்னும் சிங்கள ஜாதி வெறி வேட்பாளர்களுக்கு வாக்களித்தால் நாமே நமக்கு சங்கூத வேண்டிய துர்ப்பாக்கிய நிலை எழும். ஆறு முறை பிரதம மந்திரியாகவிருந்த ரணில் இதுவரைக்கும் தமிழருக்கென்று ஆற்றிய பணி என்ன? இன்று அவரது பண முகவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் வாக்குப் பிச்சை கேட்டு வலம் வருகிறார்கள்.

ஊடகவியலாளர் கேட்ட கேள்வி;

தாங்கள் சார்ந்த தமிழரசுக் கட்சி சஜித்தை ஆதரிப்பதாக கூறுகிறது .ஆனால் நீங்கள் சங்கை ஆதரிப்பதாக கூறுகிறீர்கள். மக்கள் யாருக்கு வாக்களிப்பது?

பதில்: ஜனாதிபதி பொது வேட்பாளர் விடயத்தில் தமிழரசுக்கட்சியினர் செயற்பாடு சங்கடங்களை தருகின்றது. தமிழ் ஜனாதிபதி பொது வேட்பாளர் தொடர்பில் தமிழரசுக் கட்சியினர் இரண்டாக பிரிந்து நிற்பது வடகிழக்கு தமிழர்களுக்கு சங்கடங்களை தருகின்றது.தமிழரசுக்கட்சி தலைமைகள் தளம்பல் நிலையில் இருந்தமையினால் உறுப்பினர்கள் பல்வேறு வேட்பாளர்களுக்கு ஆதரவளித்து வருகின்றார்கள்.இவ்வாறு பல உருவங்களாக பிரிவதற்கு தமிழரசுக் கட்சி தலைமைகள் விட்ட பிழையே காரணமாகும்.நாங்கள் இந்த அரசாங்கத்தில் எவரையும் நம்ப விரும்பவில்லை.இங்கு ஒரு இனப்பிரச்சினை இருக்கின்றது.எமது மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள்.எனவே எதிர்வரும் தேர்தலில் எமது கோரிக்கையானது சங்கு சின்னத்திற்கு வாக்களிப்பதும் எமது ஒற்றுமையை உலகிற்கு பறைசாற்றுவதுமாகும் என குறிப்பிட்டார்.

# சம்மாந்துறைப் பகுதியில் துப்பாக்கி சூடு: ஒருவர் பலி



(பாறுக் ஷிஹான்)

வீடொன்றில் ஏற்பட்ட துப்பாக்கி சூட்டில் இளம் குடும்பஸ்தர் மரணமடைந்த சம்பவம் ஒன்று சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் இடம் பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதி ஒன்றில் உள்ள வீடு ஒன்றில் சகோதரர்களுக்கிடையில் ஏற்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் 71 ஏ மல் 15 வீதி புளொக் மேற்கு-2 பகுதியை சேர்ந்த 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான பக்கீர் முகையதீன் றோஜான் என்பவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

திங்கட்கிழமை (16) இரவு 10.45 மணியளவில் குறித்த துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளதுடன் ரிப்பிட்டர் ரக துப்பாக்கியே குறித்த படுகொலைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்தள்ளது.

சம்பவம் தொடர்பில் தம்பி மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டவர் என கூறப்படும் சந்தேக நபரான சகோதரரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த துப்பாக்கி பிரயோகம் சகோதரர்களிடையே ஏற்பட்ட முன் விரோதம் காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா அல்லது எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தையல் கலை மற்றும் ஆடை வடிவமைப்பு செயற்றிட்டம்





(நூருல் ஹுதா உமர்)

கிழக்கின் சுற்றுலா மையம் அமைப்பினுடைய தையல் கலை மற்றும் ஆடை வடிவமைப்பு செயற்றிட்டம் ஐஏகு தொழிற்பயிற்சி கல்லூரியில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிழக்கிலங்கையில் வசிக்கின்ற தையல் துறையில் ஆர்வமிக்க யுவதிகளை மையமாகக் கொண்டு அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதை பிரதான நோக்கமாக கொண்டு அவர்களுக்கான தொழில் வாய்ப்பினையும் சமூக அந்தஸ்தையும் உருவாக்கிக் கொடுக்கும் நோக்குடன் கிழக்கின் சுற்றுலா மையம் செயற்திட்டத்தினூடாக ஐஏகு தொழிற்பயிற்சி கல்லூரியின் செயற்படுத்தலின் மூலம் குஊ எச்ணூட்னுணஞ குழுமத்தினரின் பூரண அனுசரணையுடன் தொழில் முனைவோருக்கான நேர்முகத் தேர்வு இடம்பெற்றது.

இந் நேர்முக தேர்வில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டதுடன் அதில் 100 பேர் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கான தொழில் வழங்கும் கடிதம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்ச்சி திட்டத்தில் அதிதிகளாக ஈஸ்டர்ன் டுவர் ஹப்யினுடைய பிரதம நிறைவேற்று பணிப்பாளர் ஏ.ஆர்.எம். சர்ஜுன், ஐஏகு தொழிற்பயிற்சி கல்லூரியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஏ.ஏ.ஏ. அபரி, குஊ எச்ணூட்னுணஞ குழுமத்தின் தவிசாளர் மொகமட் சுக்ரி, ஐஏகுங கல்லூரியின் நிறைவேற்று அதிகாரி எம்.எம். நவாஸ், கூனுஞிட டூடிணடு தொழில்நுட்ப கல்லூரியின் பிரதான நிறைவேற்று அதிகாரி பாத்திமா ரின்ஸா, ஐஏகுங கல்லூரியின் பதிவாளர் நஸீமா பானு, குகீமீ சௌமியா உற்பத்திகள் நிறுவனத்தினுடைய தவிசாளர் எஸ். சௌமியா மற்றும் பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை மாவட்ட வருடாந்த சாரணர் பாசறை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாடசாலை மாணவர்களிடையே தியாகம்,அர்ப்பணிப்பு, தலைமைத்துவம்,முதியோரை மதித்தல், முன் ஆயத்தம் ,சூயமாக இயங்கும் தன்மை, ஏனைய மதத்தினரின் கலை கலாச்சார விழிமியங்களுக்கு மதிப்பளித்தல் போன்ற பண்புகளை வளர்க்கும் நோக்கில் திருகோணமலை மாவட்ட சாரணர் சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த திருகோணமலை மாவட்ட இருபாலான பல்லின பாடசாலை மாணவர்கள் பங்கேற்ற வருடாந்த மாவட்ட சாரணர் பாசறை திருகோணமலை கிண்ணியா, சூரங்கல் அல் அமீன் மகா வித்தியாலயத்தில் இம்மாதம் 13முதல் 15 ஆம் திகதி வரை மூன்று தினங்கள் இடம் பெற்றது.

இப் பாசறையில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள தமிழ் முஸ்லிம் மற்றும் சிங்கள பாடசாலைகளைச் சேர்ந்த சாரணர் மாணவர்கள்,சாரண பொறுப்பாசிரியர்கள், பாடசாலை அதிபர்கள் ,கல்வித் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பாசறையில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டதுடன், கலை கலாச்சார நிகழ்வுகளில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் பாராட்டியும் கௌரவிக்கப்பட்டனர்.





# யாழ். வணிகர் கழகத்தினருடன் அரியநேத்திரன் விசேட சந்திப்பு!




யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தினருக்கும் தமிழ்ப் பொதுவேட்பாளர் அரியநேத்திரனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கழக காரியாலத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 75 வருடங்களாக தமிழர்கள் தங்கள் உரிமைக்காக பலவகையில் போராடி இலங்கை அரசு தமிழ் மக்களுக்கான எந்த தீர்வையும் இதுவரை வழங்கவில்லை எனவும் பல ஒப்பந்தங்கள், பல வட்டமேசை மாநாடுகள் பல பேச்சுவார்த்தைகள், பல வாக்குறுதிகள் நடைபெற்றும் எதையும் நிறைவேற்றவில்லை எனவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்திய, இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற ஆகக்குறைந்த அதிகாரமான 13 ஆம் அரசியலமைப்பு திருத்தத்தைக் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தாது, அனைவரும் ஏமாற்றப்பட்டதாகவும், எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தீர்வுக்கான புதிய அணுகுமுறையாக அணுகி ஒவ்வொரு தமிழ் மக்களும் சங்குச்சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீலங்கா கிரிக்கெட் கவுன்சில் வழங்கிய விளையாட்டு உபகரணங்கள்!



( காரைதீவு சகா)

ஸ்ரீலங்கா கிரிக்கெட் கவுன்சில் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை காரைதீவு விளையாட்டு கழகத்திற்கு வழங்கியுள்ளது .

விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் விளையாட்டு அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் அதனை நேரில் சென்று கழகச்செயலாளர் எஸ்.கிருஷாந்தனிடம் வழங்கி வைத்தார் .

இதற்கு இணைப்பாளராக இருந்து செயல்பட்ட விளையாட்டு கழக ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜா மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர் லோ.சுலக்ஷன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

## யாழ். மத்திய கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுவரும் கள ஆய்வு!



எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள ஜானாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணத்தின் வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஒழுங்கமைப்புக்கள் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் களஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இக் கள ஆய்வில் மண்டப ஒழுங்குகள், போக்குவரத்து, பொது வசதிகள், நலனோன்பு வசதிகள், மின்சார வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டதுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இக் கள ஆய்வில் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அமல்ராஜ், வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ. ஜே. ஹாலிங்க ஜெயசிங்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மற்றும் உதவி தெரிவாட்சி அலுவலர்கள் என பலர் பங்குபற்றியிருந்தனர்.

## புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல்கள் வழுங்கள்..!





(அ . அச்சுதன்)

திருகோணமலை மாவட்டத்திலிருந்து 2025 புரட்டாதி மாதத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்றவுள்ள மாணவரது பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு திருகோணமலை பட்டணமும் சூழலும் கோட்டத்தில் உள்ள செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் நான்காம் வகுப்பு மாணவருக்கு ஒவ்வொன்றும் 1930 ரூபா விலையான ஆற்றல் என்னும் புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல்கள் திங்கட்கிழமை (16) திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் வழங்கப்பட்டது.

இந் நூல்களைத் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கதிரவேலு சண்முகம் குகதாசன் அவர்கள் வழங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்க செயலாளர் கணபதிப் பிள்ளை சிவானந்தன், செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலய முதல்வர், ஆசிரியர், பெற்றோர் முதலியோர் கலந்து கொண்டனர்.

## கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இளவாலை ஐக்கிய வாலிபர் விளையாட்டுக்கழகம் வீழ்த்தி வேற்றி





(அஸ்ஹர் இப்றாஹிம்)

அமரர் சிவகுருநாதன் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும் கரப்பந்தாட்ட தொடரின் போட்டியொன்றில் இளவாலை ஐக்கிய வாலிபர் விளையாட்டுக்கழகமும், புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களை கொண்ட இப்போட்டியின் முதலாவது சுற்றின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்தி வந்த இளவாலை ஐக்கிய வாலிபர் அணி 25:16 என்ற புள்ளியடிப்படையில் வெற்றியை பெற, இரண்டாவது சுற்றில் கலைமதி தனது அபார ஆட்டம் மூலம் கடும் போட்டியின் மத்தியில் 25:22 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

வெற்றியை தீர்மானிக்கவேண்டி ஆரம்பமாகிய 3வது சுற்று மிகவும் நெருக்கமான புள்ளியிடைவெளியில் ஆரம்பம் முதல் நகர்ந்த போதும் இறுதியில் 25:16 என்ற அடிப்படையில் கலைமதி விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி சொந்த மைதானத்தில் வெற்றி கொண்டது ஐக்கிய வாலிபர் விளையாட்டுக்கழகம்.

# கொக்கட்டிச்சோலையில் ஞாயிறன்று தேரோட்டம்

சுயம்பு லிங்கமாய் தோன்றிவீற்றிருக்கும் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த தேரோட்டம் எதிர்வரும் 22.09.2024ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 04மணிக்கு இடம்பெறவுள்ளது.

கிழக்கிலங்கையில் தேரோடும் திருத்தலம் எனப் பெயர்பெற்றதும், வருடாந்த மகோற்சவத்தினை தேரோட்டம் என அழைக்கப்படுகின்ற ஒரேயொரு ஆலயமாக கருதப்படுவது கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயமாகும்.

இவ்வாலயத்தின் வருடாந்த மகோற்சமானது கடந்த 04.09.2024ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ச்சியாக குடிமக்களின் உபயத்துடன் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. மகோற்சவ காலத்தில் தம்பபூசை, வச்ந்த மண்டப பூசை, சுவாமி உள்வீதி வலம் வருதல், வெளிவீதி வலம் வருதல் போன்றன விசேடமாக நடைபெறுகின்றன.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தேரோட்டம் இடம் பெற்றதனைத் தொடர்ந்து அன்றிரவு முனைக்காடு வீரபத்திரர் ஆலய முன்றலில் திருவேட்டைத்திருவிழாவும் எதிர்வரும் திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெற்று ஆலய மகோற்சவம் நிறைவு பெறவிருக்கின்றது. 2000ஆண்டுகள் பழமையான இரண்;டு கட்டுத் தேர்கள் ஆண் அடியார்களினால் வடம்பிடித்து இழுக்க மணல்மண்ணில் சில்புதையுண்டு வலம் வருகின்ற நிகழ்வே தேரோட்டமென அழைக்கப்படுகின்றது. இத்தேர்களை இழுப்பதற்கான புதிய வடக்கயிறுகள் கன்னன்குடாவில் திரிக்கப்பட்டு சம்பிரதாயபூர்வமாக திங்கட்கிழமை ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன.



# சாகும் வரை உண்ணா விரதமிருந்து

## வாக்குரிமைக்கு போராடிய அமெரிக்க மகளிர்!

உலக வரலாற்றில் பெண்களின் உரிமைக்காக உண்ணாவிரத போராட்டங்களை மேற்கொண்டு, தங்கள் கோரிக்கைகளை வென்றுள்ளனர். அமெரிக்க பெண் உரிமை போராட்டத்தில் பெண்கள் எடுத்துக் கொண்ட ஆயுதம் உண்ணாவிரதமாகும்.

**அமெரிக்க பெண் உரிமை போராட்டம்:**

அலஸ் ஸ்டோக்ஸ் பால் (அடூடிஞிநு குஞணிடுனுண் கச்தடூ) ஓர் அமெரிக்க பெண்ணியவாதியும், பெண்கள் உரிமை ஆர்வலர் ஆவார். அமெரிக்க அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தத்திற்கான பிரச்சாரத்தின் முன்னணி மூலோபாயவாதிகளில் இவரும் ஒருவர்.

அக்காலத்தில் அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட பெண் வாக்களிக்கும் உரிமைக்காகவும் பாலின பாகுபாட்டை எதிர்த்து அலஷ் பால், லூசி பர்ன்ஸ் மற்றும் பிறருடன் இணைந்து, பெண் வாக்குரிமை போராட்டங்களை முன்னின்று நடாத்தியவர்.

உரிமைக்கான பெண்கள் ஊர்வலம், உண்ணாவிரதம் போன்ற அகிம்சை நிகழ்வுகளை மூலோபாயமாக்கி போராடியதன் வெற்றிகரமான பிரச்சாரத்தின் மூலம் அமெரிக்காவில் பிரபல்யமானார். இதன் விளைவாக ஆகஸ்ட் 1920 இல் பெண் வாக்குரிமை திருத்தம் நிறைவேற்றப்பட்டது.







1885 இல் நியூ ஜெர்சியில் பிறந்த அலஷ் பால், (ஜனவரி 11, 1885 - ஜூலை 9, 1977) தன் சிறு வயதிலிருந்தே பெண்களுக்கான வாக்குரிமை நிகழ்வுகளில் கலந்து கொண்டார். அவர் சமூகப் பணியைப் படித்தாலும், குடியேற்ற வீடுகளில் ஏழைகளுக்குச் சேவை செய்தாலும், பெண்களுக்கான உரிமைக்காக

சமூகப் பணியை தொடர்ந்து மேற்கொண்டார். உயர் கல்வியில் அவர் உயிரியல் மற்றும் சமூகவியலில் பட்டங்களை முடித்த பிறகு, பொருளாதாரம் மற்றும் சமூகவியலில் தனது படிப்பைத் தொடர 1907 இல் பிரிட்டனுக்குச் சென்றார்.

அவர் பிரிட்டனில் பெண்கள் சமூக மற்றும் அரசியல் ஒன்றியத்தில் (ஙிகுகக்) சேர்ந்து, பெண்களின் சம உரிமைகளுக்காக ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் சிவில் ஒத்துழையாமை ஆகியவற்றில் பங்கேற்றார். இதன் விளைவாக, அவரும் பிரிட்டனில் உள்ள மற்ற பெண் வாக்குரிமையாளர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.


**பெண் வாக்குரிமைக்காக போராட்டம்:**

பெண்களின் வாக்குரிமைக்காக Emmeline மற்றும் Christabel Pankhurst தலைமையில், ஙிகுகக் உறுப்பினர்கள் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தி சிறையில் தங்கள் கட்டாய சிகிச்சை , உணவு அருந்துதலை எதிர்த்தனர்.

**உண்ணாவிரத போராட்டங்கள்**

ஒரு சக்திவாய்ந்த ஆயுதமாக மாறியது. ஏனெனில் அவை கூடுதல் தாக்கத்தை மக்களிடத்தில் ஏற்படுத்தியது. அதே காரணத்திற்காக மக்களிடம் அனுதாபத்தை பெரிதும் உருவாக்கியது.

1910 ஆம் ஆண்டில், பால் கிரேட் பிரிட்டனில் இருந்து அமெரிக்கப் பெண்களுக்கான சட்ட மற்றும் பொருளாதார சமத்துவத்திற்காக வேலை செய்யத் திரும்பினார், தேசிய அமெரிக்க பெண் வாக்குரிமை சங்கத்தில் (மீஅஙிகுஅ) சேர்ந்தார். 1890 மற்றும் 1910 க்கு இடையில், மாநில வாரியான மூலோபாயம் சில மேற்கு மாநிலங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. தெருக் கூட்டங்கள், அணிவகுப்புகள் மற்றும் மறியல் போராட்டங்கள் உட்பட இங்கிலாந்தில் அவர் பங்கேற்றது போன்ற தேசிய அளவில் போர்க்குணமிக்க எதிர்ப்பு உத்திகளுக்கு மாற வேண்டியது என்று அலஷ் பால் நம்பினார்.




**பெண் உரிமைக்காக உண்ணாவிரதம்:**

இந்த அகிம்சை நடவடிக்கைகள் அனைத்தும் பெண்களின் தலைமை சரியான கிளர்ச்சியை பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமைந்தது. 1913 மார்ச் 3 ஆம் தேதி பெண் வாக்குரிமை ஊர்வலத்தை அவர்கள் ஏற்பாடு செய்தனர். 8,000 க்கும் மேற்பட்ட மக்கள் இந்த ஊர்வலத்திற்காக அணிவகுத்துச் சென்றனர்.

அமெரிக்காவில் பெண் உரிமைக்காக ஊர்வலம், உண்ணாவிரதம் போன்ற அகிம்சை நிகழ்வுகளை மூலோபாயமாக்கி போராடியதன் மூலம் ஆகஸ்ட் 1920 இல் பெண் வாக்குரிமை திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

உலகளாவிய ரீதியில் பெண்கள் அடக்குமுறைகளை எதிர்க்க உண்ணாவிரதப் போராட்டத்தை ஓர் எழுச்சி வடிவமாகவே கருதி போராடி இருக்கின்றனர். உயிரீகத்தின் உச்சம் தொட்ட அன்னை பூபதியம்மா ஈழ மண்ணில் தன் உயிர்க் கொடையால் தியாகத் தாயாக என்றும் விளங்குகின்றார்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**




# நாவலப்பிட்டியில் துண்டுப் பிரசுரத்தை வாங்க மறுத்த இளைஞர் மீது தாக்குதல்!

துண்டுப் பிரசுரத்தைப் பெற்றுக்கொள்ள மறுத்த நபர் மீது ஐக்கிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளர் தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நாவலப்பிட்டி நகரின் மத்தியில் அமைந்துள்ள கடிகாரம் பழுதுபார்க்கும் கடையொன்றில் வைத்தே நேற்று முற்பகல் குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், உரிமையாளரின் மகனே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார் என வும் இது தொடர்பான காணொளிக்காட்சிகள் அக்கடையில் பொருத்தப்பட்டிருந்த இஇகூங கெமராவில் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தாக்குதலுக்கு இலக்கான இளைஞன், நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுள்ளதோடு, இது குறித்து பொலிஸாரிடம் முறைப்பாட்டை வழங்கியதன் பின்னர் (16) வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


வெல்க
தமிழ்
ஜனாதிபதித் தேர்தல் - 2024
தமிழ்ப் பொதுவேட்பாளர்
பா.அரியநேத்திரன்


முனைப்பு நடாத்தும்
கதம்பமாலை
MUNAIPPU
முனைப்பு
2024
மக்கள் சேவையில் முனைப்பு
14 வது ஆண்டில்
காலம் : 22.09.2024
நேரம் : ஞாயிறு மதியம் 02.00 மணி
இடம் : Pfarrei St. Karl
Spital Strasse 93, 6004 Luzern
தொடர்புகளுக்கு : 079 775 43 69
078 626 43 75 / 079 295 99 46
munaippu@gmail.com
www.munaippuswiss.com
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அனுமதி இலவசம்
Sikaram
Y.RAJ GOLDSCHMUCK
உணரும் உதவி உயரியது
வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின்
வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த
முனைப்புக்கு கை கொடுப்போம்...


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Sikaram INTL GmbH
Heinrich Strasse 120,
8005 Zürich
Tel : 044 2410241
H.P : 077 944 2877


SHELVA ZUG
SWISS இல்
புதிய வீடு கட்ட
041 790 64 63
079 514 64 28
www.shelvazug.com
shelvazuggmb@gmail.com
வீடு வாங்க
வீடு கட்ட
வீடு விற்க்க
வீடு திருத்த


ellaalan fleisch
GEFLÜGEL • FLEISCH • TIEFKÜHLPRODUKTE
RAJATHURAI .K
Geschäftsführer
Feldweg 1 5727 Oberkulm AG
076 781 78 78
041 870 88 44
ellaalan@hotmail.com
www.ellaalan.com
EllaalanFleisch


Dr (h.c) Nageswaran Arulrasa D.Litt,
Zert Versicherung & Vorsorge Berater
Aadaa Finance GmbH
Hauptstrasse 54, 6015 Luzern Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma : 34598
25605


SOPI
Dhivo
Flurhuhlerain. 1A
6015 Reussbühl (Luzern)
Tel No. : +41 41 240 01 48
Mob : +41 76 310 78 79
IND No. : +91 9381570068
Mail : dhivao@gmx.net


S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 31 8005 Zürich
info@stravel.ch www.stravel.ch
044 419 91 00


079 919 48 67


Sagi Büron
Angolo d'italia
Restaurant · Weinbar · Café
Sagipark 5, 6233 Büron
041 558 14 85




AHANYA
JEWELLERY


RAVI GOLD
043 818 2050
079 615 7850


SIVAS
SALOON GmbH


LERNE DAS FAHREN BEI UNS !


076 310 6858


KNS
LAXMI TRADING GmbH


Y.RAJ
GOLDSCHMUCK


Ammas
076 773 77 77
043 7762030


Y.R.I
PARTY SERVICE /
TAKE AWAY SERVICE
ASIAN KITCHEN
LUCERNE, SWITZERLAND


N. Sritharan
Si
ஸ்ரீ ஜுவல்லரி
Mattengasse 17
8005 Zürich
079 898 51 01
043 366 80 09


JTM ASIAN
FOOD GmbH
079 911 2756




GOURA
JEWELLERY
N.KAJANTHAN
Sales Manager